மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் பதில் சொல்லக் கூடிய அளவிலே இங்கே கேட்க வேண்டாம் என்று நான் சொல்லியிருக்கிறேன்...
.... (குறுக்கீடு) எல்லா கால் அட்டென்ஷன்களையும் அப்ஜக்ட் பண்ண சொல்லி விட்டேன். ஒன்றுக்குக் கொடுத்தால் இன்னொன்று வரும்........ (குறுக்கீடு).

2. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஈ) அரசு நிகழ்ச்சிகளுக்கு உறுப்பினர்கள் அழைக்கப்படுவது —தொடர்ச்சி.

திரு. ஏ. எஸ். ரவீந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்களுடைய உரிமைப் பிரச்சினை. நேற்று மாலை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு அழைப்பிதழ் கிடைக்கப் பெற்றிருக்கிறது. அது 19-11-1986 முதல் 25-11-1986 வரை நடைபெறுகின்ற ஒரு விழாவிற்கான அழைப்பு. ஆனால் அது 20-ந்தேதி மாலைதான் உறுப்பினர்களுக்கும் கிடைக்கின்கின்றது, என்றால் அந்த அழைப்பு அனுப்புவதன் நோக்கம் என்ன?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது அவை நடவடிக்கை அல்ல. இது சம்பந்தமாக அமைச்சரிடம் வெளியே கேட்டுக் கொள்ளுங்கள்.

திரு. எ. எஸ். ரவீந்திரன் : உறுப்பினர்களுடைய உரிமைப் பிரசசினையாகத்தான் நான் இதை கிளப்புகிறேன். அவை நடவடிக்கை என்று நான் கேட்கவில்லை.

(உ) தாய்த் தமிழகத்துடன் இணைய போராடிய தியாகிகளுக்கு பென்ஷன் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது குறித்து.

டாக்டர் தே. குமாரதாஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாய்த் தமிழகத்துடன் கன்னியாகுமரி மாவட்டம் இணைய வேண்டும் என்பதற்காகப் போராடிய தியாகிகளுக்குப் பென்ஷன் வழங்க வேண்டும் என்கின்ற விதத்தில் அவர்களுக்கு எமர்ஜென்சிக்கு முன்பாக 1976 வரைக்கும் வழங்கப்பட்டு வந்த பென்ஷன், எமர்ஜென்சி டிக்ளேர் ஆன பிறகு நிறுத்தி வைக்கப்பட்டு இருக்கிறது. அதை மீண்டும் வழங்க வேண்டுமென்று.... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : என்னிடம் அனுமதி பெறவில்லை.

டாக்டர் தே. குமாரதாஸ் : நான் வந்த போது நீங்கள் இல்லை.

1986 நவம்பர் 21]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து அமருங்கள். இன்று ஒரு நாள் தான் பாராளுமன்ற துணை சபா நாயகர் அவர்களுடைய திருமணத்திற்குச் சென்று விட்டு வந்தேன். அது கூட வேண்டாம் என்றால் இனி அதுவும் போக வில்லை. வேறென்ன செய்வது? கவனத்தை ஈர்த்தாகி விட்டது. போதும். நீங்கள் சம்பந்தப்பட்ட அமைச்சரிடம் இதைத் தெரிவித்து இருப்பீர்களானால் அவர்கள் நிச்சயமாக ஒரு பதிலைச் சொல்வதற்கு வந்திருப்பார்கள். திடீரென்று எழுப்பும் போது அவர்களும் பதில் சொல்ல முடியாது.............(குறுக்கீடு).

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதையும் ஒரு முறையாகக் கேட்க வேண்டும், கேள்வியாகக் கேட்க வேண்டும். குறுகிய காலக் கேள்வியாக கேட்க வேண்டும், கேள்வியை முறையோடு கேட்க வேண்டும். திடீரென்று கேட்கக் கூடாது. .... (குறுக்கீடு) இந்தப் பேரவையில் கேட்கக் கூடாது.

3. உறுப்பினர்கள் அரசியலமைப்புச் சட்டப் பிரதியை எரித்தது —தொடர்ச்சி.

திரு. அ. ரகுமான்கான் : மாண்புமிகு மன்றத்தினுடைய பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் விருப்பப்பட்டு, சபையில் எழுப்பப்பட்ட ஒரு கேள்விக்கு அனுமதி கொடுத்து அது பத்திரிகைக் குறிப்பிலே வந்துவிடும். நம்முடைய முன்னவர் அவர்களும் பதில் சொல்லிவிட்டார்கள். இந்திரா காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சட்ட மன்ற உறுப்பினர்களும் இங்கே பதில் சொல்லி விட்டார்கள். ஆனால் இங்கே, இந்தச் சட்டமன்றத்திலே இப்பொழுது இல்லாமல் சிறையில் இருக்கக் கூடிய சட்ட மன்ற உறுப்பினர்கள் சார்பாக அவர்கள் நிலமையை விளக்கிச் சொல்வதற்கு இயலாது. ஏனென்றால் அவர்கள் சம்பந்தமான ஒரு கேள்வி..........(குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் பதில் சொல்ல வில்லை. பாதிப்பு ஏற்படக் கூடிய அளவுக்கு ஒரு இடமே கொடுக்க வில்லை. அதை நாம் விளக்க வேண்டாம்.

திரு. அ. ரகுமான்கான் : சார் ஒரு நிமிடம். ஆகையினால் தாங்கள் ஒன்றும் சொல்லாமல் விட்டு விட்டீர்கள். முன்னவர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார்கள். எங்களைப் பொறுத்த மட்டில் எங்கள் கட்சியின் சார்பாகச் சொல்ல விரும்புவது, அண்ணா அவர்கள் .... (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 188 ஆவது பிரிவை நான் பதிலாகச் சொன்னேன். அதற்கு மேல் விவாதம் வேண்டாம்.